**வஞ்சகன்**

**வாசிக்க**: 2**இராஜாக்கள்** 8:7-15

எலிசாவின் ஆலோசனையை அன்றைய அரசர்களும், அயல் நாட்டு அரசர்களும், படைத் தலைவர்களும் நாடினார்கள். எலிசா தன்னுடைய அன்றாட கடமை பெரிதோ, சிறியதோ, கடுமையானதோ எப்படி இருந்தாலும், அதை முழுமனதுடன் உண்மையுடன் செய்து வந்தார். எனவே தேவன் அவரை உயர்த்தினார். எலிசா வயது சென்றவராக இருந்தாலும் தன் கடமையை அயராது செய்து வந்தார்.

எலிசா தமஸ்குவிற்கு சென்றபோது பெனதாத் நோயுற்றிருந்தான். அவன் தன்னுடைய பிரபுக்களில் ஒருவனாகிய ஆசகேலை அழைத்து, நான் நோய் நீங்கி சுகமாவேனா என்று எலிசாவிடம் கேட்டுவர அனுப்பினான். ஆசகேல் 40 ஒட்டகங்களில் பரிசு பொருட்களை எடுத்துக்கொண்டு எலிசாவிடம் வந்தான். ஆசகேல் ஒரு சதிகாரன், பொல்லாதவன், கொடியவன் என்று எலிசாவுக்கு தெரியும். எலிசா அவனைப் பார்த்து “அவன் சுகமாவான் என்று சொல்லு ஆனால் அவன் செத்துப்போவான் என்பதை கர்த்தர் எனக்கு காட்டினார். அதுதானே உனக்கு விருப்பம்”! என்று சொல்லி அவனை கூர்ந்து பார்த்து வெகு நேரம் அழுதான்.

ஆசகேல் வெட்கத்துடனும், நடுக்கத்துடனும் என் ஆண்டவன் அழுவது என்ன என்றான். எலிசா அக்கொடிய வஞ்சகனைப் பார்த்து நீ இஸ்ரவேலுக்கு செய்யப்போகும் தீங்கை நினைத்து அழுகிறேன். நீ அவர்கள் கோட்டைகளை எரித்து மக்களை கொடூரமாக சாகடிப்பாய் என்றார். ஆசகேல் பிரமிப்புடன் "இத்தனை பெரிய காரியத்தை செய்ய உமது அடியான் எம்மாத்திரம்" என்றான். எலிசா கர்த்தர் உன் எண்ணத்தை எனக்கு வெளிப்படுத்தினார் என்றார்.

எலிசா அச்சமில்லாமல் அந்த கொடியனை எச்சரித்தார். தன்னுடைய மக்களின் அழிவைக் குறித்து பாரம் கொண்டார். தன்னுடைய மக்களுக்காக பாரம் கொள்கிறவர்களை தேவன் அற்புதமாக பயன்படுத்துகிறார். எலிசாவின் வார்த்தை மறு நாள் நிறைவேறியது. ஆசகேல் ஈர ஜமுக்காளத்தால் பெனாதாத்தின் முகத்தில் போட்டு இறுக்கி கொன்றான். வஞ்சகனாகிய அந்த கொடியவன் பெனாதாத்திடத்தில் அரசனானான்.

**கேள்விகள்**:

1. எலிசாவை தேவன் ஏன் உயர்த்தினார்?

2. எலிசா ஏன் அழுதார்?

3. யாரை தேவன் அற்புதமாக பயன்படுத்துகிறார்?